# கழகத் தலைவரை இந்தியா வியந்து பார்ப்பது ஏன்?

தேர்தல் களம் 2021ல் களை கட்டியிருந்த நேரம். முத்தமிழறிஞர் கலைஞர் இல்லாத சட்டமன்றத் தேர்தலைத் திராவிட முன்னேற்றக் கழகம் முதன்முறையாக சந்திக்கிறது. உடன்பிறப்புகளிடம் நம்பிக்கையும் உழைப்பும் வெளிப்பட்டாலும் ஒரு பதற்றமும் உள்ளூர இருக்கத்தான் செய்தது. உழைத்துக் கொண்டே இருக்கும் கழகத் தலைவரின் நம்பிக்கை அபாரமானது. அண்ணா அறிவாலயம் முகப்பில் ‘கவுண்ட் டவுன்’ கடிகாரத்தைப் பொருத்தச் செய்கிறார்.

தேர்தல் முடிவுகள் வெளியாக இன்னும் எத்தனை நாட்கள், எத்தனை மணி நேரம், எத்தனை நிமிடம், எத்தனை நொடி என்பதைக் காட்டக்கூடிய அந்த கடிகாரத்தில் நேரமும் நாளும் குறைந்து கொண்டே வரும் போது பலரது மனதும் பதைபதைக்கிறது. வாக்குப்பதிவுக்கும் வாக்கு எண்ணிக்கைக்கும் அப்போது ஏறத்தாழ மூன்று வாரங்களுக்கு மேல் இடைவெளி இருந்ததால் பதற்றம் தொற்றுகிறது. இவ்வளவு வெளிப்படையாக எதிர்க்கட்சிகளும் ஊடகங்களும் தெரிந்து கொள்ளும்படியான சவாலை கழகத் தலைவர் எதிர்கொள்கிறாரே என்ற யோசனையும் பலருக்கும் இருந்தது.

மே 2ஆம் நாள் தேர்தல் முடிவுகள் வெளியாகத் தொடங்கின. உதயசூரியன் உதிக்கும் நேரம் வந்தது. அது உச்சி சூரியனாக வந்த பகல் 1 மணியளவில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆறாவது முறையாக ஆட்சி அமைப்பதும், தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைப்பதும் உறுதியான நிலையில், மதியம் 2 மணி வாக்கில் கவுண்ட் டவுன் நிறைவடைந்து, கடிகாரம் அணைக்கப்பட்டது. இதுதான் கழகத் தலைவரின் தெளிவான - திடமான தொலைநோக்குப் பார்வை.

தன் மீதான உழைப்பின் மீது மட்டுமல்ல, கழகத்தின் கடைக்கோடி உடன்பிறப்பின் உழைப்பின் மீதும் நம்பிக்கை வைத்துதான் அந்த கவுன்ட் டவுன் கடிகாரத்தை அறிவாயலயத்தின் முகத்தில் பொருத்தச் செய்தார். வெற்றி பெறுவதற்கான அத்தனை உழைப்பையும் அவரே முன்னின்று செய்தார். அதே உழைப்பை உடன்பிறப்புகளும் செய்யும்படி வியூகம் வகுத்தார். வென்று காட்டினார்.


**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று அவர் ஆளுநர் மாளிகையில் பதவிப் பிரமாணம் எடுத்த போது, அவர் முகம் மட்டும் நிமிரவில்லை. இந்தியாவே அவரைத் திரும்பிப் பார்த்தது. தமிழ்நாடு எனும் மாநிலத்தின் முதலமைச்சராக மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களின் உரிமைகளைக் காக்கும் போராளியாக அவர் சுடர் முகம் தூக்கினார். மத்திய அரசு என்பதை ஒன்றிய அரசு எனக் குறிப்பிட்டபோது, பேரறிஞர் அண்ணா– முத்தமிழறிஞர் கலைஞர் வழியிலான மாநில சுயாட்சியின் குரல் ஒலித்தது. இந்திய நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டு எம்.பி.க்களின் குரல் போர் முழக்கமானது.**

டெல்லி Vs தமிழ்நாடு என்று கழகத் தலைவர் முன்வைத்தது வெறும் தேர்தல் முழக்கமல்ல. கூட்டாட்சி இந்தியாவில் சுயாட்சிமிக்க மாநிலங்களுக்கான பிரகடனம். ஒரு மாநிலத்தின் சட்டமன்றத் தேர்தலை இந்தியாவே கவனிக்கும் தேர்தலாக மாற்றிய பெருமையும் அவருக்கேயுரியது. தமிழ்நாட்டுடன் தேர்தலை சந்தித்த மாநிலங்களான மேற்குவங்கம், கேரளம் ஆகியவை ஒன்றிய பா.ஜ.க அரசால் தமிழ்நாட்டைப் போலவே பல வஞ்சகங்களை சந்தித்து வரும் மாநிலங்கள். அங்குள்ள மக்களுக்கும் சேர்ந்து ஒலித்த குரல்தான், கழகத் தலைவரின் குரல்.

தமிழ்நாட்டைத் திட்டமிட்டு வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராகத் துணிச்சலுடன் தன் செயல்பாடுகளைக் கடந்த ஐந்தாண்டு காலமும் தொடர்ந்து மேற்கொண்டவர் தமிழ்நாடு முதலமைச்சரான நம் கழகத் தலைவர். 2019ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியாவில் வேறெந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், மதவாத பா.ஜ.க.வுக்கு எதிரான அரசியல் கட்சிகளை கொள்கை ரீதியாக ஒருங்கிணைத்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியைக் கட்டியமைத்து, தமிழ்நாடு-புதுச்சேரி உள்ளிட்ட 40 தொகுதிகளில் 39 தொகுதிகளில் வெற்றியை உறுதி செய்தார்.

இந்த தமிழ்நாடு ஃபார்முலாதான் 2024ல் ‘இந்தியா’ கூட்டணி என நாடு தழுவிய அளவில் அமைவதற்கு காரணமாக அமைந்தது. எந்தெந்த மாநிலங்களில் எந்தெந்த கட்சிகள் வலுவானதாக இருக்கிறதோ அவை அந்தந்த மாநிலங்களில் அதிக தொகுதிகளில் போட்டியிட்டு, மீதமுள்ளவற்றை மற்ற கட்சிகளுக்கு பகிர்ந்தளித்தல் என்கிற சிந்தனையையும் முன்வைத்தவர் நம் கழகத்தலைவர். 2024 நாடாளுமன்றத் தேர்தல் களத்தை ‘இந்தியா’ கூட்டணி அப்படித்தான் எதிர்கொண்டது. அதன் விளைவு முக்கியமானது.

அதற்கு முந்தைய இரண்டு நாடாளுமன்றங்களில் தனித்து ஆட்சியமைத்த பா.ஜ.க. இம்முறை தனி மெஜாரிட்டி பெற முடியாத மைனாரிட்டி அரசாக அமைந்தது. கடந்த இரண்டு நாடாளுமன்றங்களில் மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவரே இல்லாத நிலை உருவானது. கழகத் தலைவரின் வழிகாட்டுதலில் அமைந்த ‘இந்தியா’ கூட்டணியால் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி ஏறத்தாழ 100 இடங்களில் வென்று, ராகுல் காந்தி அவர்கள் மக்களவை எதிர்க்கட்சித் தலைவரானார்.



ராமர் கோயில் கட்டிய அயோத்தியை உள்ளடக்கிய நாடாளுமன்றத் தொகுதியிலேயே பா.ஜ.க. தோற்கடிக்கப்பட்டது. உத்தரபிரதேசத்தில் பா.ஜ.க. கண்டிருந்த கனவைத் தகர்த்தெறிந்தார். சமாஜ்வாடி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ். தமிழ்நாட்டில் 40க்கு 40 என்ற முழுமையான வெற்றியைப் பெற்று இமாலய சாதனை புரிந்தது கழகத் தலைவரின் வழிநடத்துதலில் பயணித்த இந்தியா கூட்டணி.

**-அத்திக்கடையான்**

**நாடாளுமன்றத்தில் மெஜாரிட்டி இல்லாத ஆளுங்கட்சி, பலம் வாய்ந்த எதிர்க்கட்சிகள் என களத்தின் நிலையை மாற்றிக் காட்டிய சூத்திரதாரி ஆனார் நம் கழகத்தலைவர். அவர் நாடாளுமன்றத்தில் இல்லை. ஆனால், ஒன்றிய ஆளுங்கட்சிக்கு அவர் சிம்ம சொப்பனமானார்.**

பா.ஜ.க. அல்லாத கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களில் ஆளுநர் மூலமாக இணை அரசாங்கம் நடத்த நினைத்த ஒன்றிய அரசின் எண்ணம் தமிழ்நாட்டில் நிறைவேறாத வகையில், ஆளுநரின் அடாவடி நடவடிக்கைகளுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் சட்டப்போராட்டம் நடத்தி வெற்றி கண்டார். சட்டமன்றத்தில் ஆளுநர் உரையின்போது ஆளுநரே வெளிநடப்பு செய்யும் நிலைமை உருவானது.

எதிர்க்கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களில் அபாண்ட பழிகளையும்-அவதூறுகளையும் பரப்பி, ஒன்றிய பா.ஜ.க அரசு தனது பரிவாரங்களான அமலாக்கத்துறை, சி.பி.ஐ, வருமானவரித்துறை, என்.ஐ.ஏ ஆகியவற்றை ஏவி நடவடிக்கையை மேற்கொள்வதை வாடிக்கையாக வைத்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ள திராவிட மாடல் அரசு இந்தப் பூச்சாண்டிகளுக்குப் பயப்படாமல் தன் பணியைத் தொடர்ந்து மேற்கொண்டதுடன், ஒன்றிய பா.ஜ.க அரசால் ஏவப்படும் அமலாக்கத்துறையின் உண்மை முகத்தை நாடே அறியும் வகையில், அங்கித் திவாரி என்ற அமலாக்கத்துறை ஊழல் அதிகாரி மீது சட்ட நடவடிக்கை எடுத்து கைது செய்து மாநில அரசின் அதிகாரம் என்ன என்பதை டெல்லி பாதுஷாக்களுக்குக் காட்டினார் நம் முதலமைச்சர்.

தமிழ்நாடு என்றைக்குமே டெல்லிக்கு அவுட் ஆஃப் கண்ட்ரோல்தான் என்பதை சொல்லாக மட்டுமின்றி, செயலாகவும் நிரூபிக்கும் வகையில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகையான மாதம் 1000 ரூபாயை தேர்தல் விதிமுறைகளைக் காட்டி நிறுத்துவதற்கும் பா.ஜ.க.வும் அதன் அடிமைக் கூட்டணிகளும் முயற்சி செய்வதை முன்கூட்டியே உணர்ந்து, பிப்ரவரி 13 அதிகாலையில் பொழுது விடிவதற்கு முன்பே 1கோடியே 31 இலட்சம் மகளிருக்கு 3 மாதங்களுக்கான உரிமைத்தொகையையும், கோடைக்கால சிறப்புத் தொகையையும் சேர்த்து 5000 ரூபாயாக அவரவர் வங்கிக் கணக்கில் வரவு வைத்து டெல்லியை அதிர வைத்தவர் கழகத் தலைவர்.

மக்கள்தொகை அடிப்படையில் தொகுதி வரையறை எனும் ஒன்றிய பா.ஜ.க அரசின் திட்டத்தால், மக்கள்தொகையை முறையாகக் கட்டுப்படுத்தி நாட்டின் வளர்ச்சிக்குத் துணை நின்ற தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களும் ஏனைய சில மாநிலங்களும் பாதிக்கப்படும் என்பதை ஏறத்தாழ ஓராண்டுக்கு முன்பே எச்சரிக்கை மணி அடித்ததுடன், அது குறித்து ஆலோசிப்பதற்கு பல மாநிலங்களின் முதலமைச்சர்களையும், கட்சித் தலைவர்களையும் சென்னைக்கு அழைத்து கலந்தாலோசனை மாநாடு நடத்தியவரும் தமிழ்நாடு முதலமைச்சரான நம் கழகத் தலைவர் அவர்கள் தான்.

அவர் எச்சரித்ததுபோலவே, வஞ்சக ஒன்றிய பா.ஜ.க. அரசு, மகளிருக்கான 33% இடஒதுக்கீடு எனும் பசுந்தோலைப் போர்த்தி, தொகுதி மறுவரையறை எனும் புலியை அதற்குள் ஒளித்து வைத்து நிறைவேற்ற முயன்றபோது, அதனை சரியாக அடையாளம் கண்டு, கூட்டணிக் கட்சித் தலைவர்களிடம் வலியுறுத்தி, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு இல்லாத வகையில் எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைப்பை மேற்கொண்டு சட்டத் திருத்த மசோதாவை முறியடித்துக் காட்டினார் நம் திராவிட நாயகர். பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க அரசு பதவிக்கு வந்த 12 ஆண்டுகளில் நாடாளுமன்றத்தில் எதிர்கொண்ட முதல் தோல்விக்கு முதன்மைக் காரணமாக அமைந்தவர் நம் தலைவர்.

பா.ஜ.க.வைத் தோற்கடித்தது மட்டுமின்றி, இந்திய ஜனநாயகத்தையும் மாநில உரிமைகளையும் அரசமைப்புச் சட்டத்தின் மாண்பையும் காப்பாற்றிய பெருமைக்குரியவராக கழகத் தலைவரை இந்தியா வியந்து பார்க்கிறது. நடப்பது மாநில சட்டமன்றத்திற்கானத் தேர்தல் என்றபோதும், அதைத் தமிழ்நாடு என்ற எல்லையுடன் சுருக்காமல், தி.மு.க. Vs அ.தி.மு.க. என்று மட்டுமே பார்க்காமல், புதிதாக முளைத்து முறுக்கிக் கொண்டிருக்கிறவர்களைப் பற்றிக் கவலைப்படாமல், தமிழ்நாடு இதுவரை கண்டிராத வகையில் 4 தேர்தல் களங்களாகத் தொடர்கின்ற கொள்கைக் கூட்டணியை கட்டுக்கோப்புடன் முன்னெடுத்து, மேலும் சில கட்சிகளையும் சேர்த்துக்கொண்டு டெல்லி Vs தமிழ்நாடு என்ற பரந்த அளவிலான நோக்கத்துடன் தேர்தல் களத்தை எதிர்கொண்ட மகத்தானத் தலைவராக நம் முதலமைச்சர் உயர்ந்து நிற்கிறார்.

காரணம், மதநல்லிணக்கமும் சமூக நீதியும் இணைந்து சிறப்பான வளர்ச்சியையும் அமைதியான சூழலையும் கொண்டுள்ள தமிழ்நாட்டிற்குள் அ.தி.மு.க.வின் தோளில் ஏறி, நுழைய முயற்சிக்கும் பா.ஜ.க.வின் சதியை முறியடிக்கும் தேர்தல் இது என்பதை மிகத் தெளிவாக உணர்ந்தே நம் தலைவர் டெல்லி Vs தமிழ்நாடு என இதனை முன்னெடுத்தார். மக்களின் பேராதரவைப் பெற்றுள்ளார்.

**அண்ணா அறிவாலயம் முகப்பில் இந்தத் தேர்தலிலும் கவுன்ட் டவுன் கடிகாரம் இயங்கிக் கொண்டிருக்கிறது. கடந்த தேர்தலைப் போலவே இந்த முறையும் வாக்கு எண்ணிக்கை நாளான மே 4ஆம் நாள் நண்பகலில் உச்சிக்கு சூரியன் வரும்போது, உதயசூரியனும் அதன் தோழமைக் கட்சி சின்னங்களும் மகத்தான வெற்றியைப் பெற்றிருக்கும் என்பது நிச்சயம்.**

**முதலமைச்சராக தலைவர் தொடர்வார். தமிழ்நாடு வெல்லும்.**

## பீகாரில் ஒரே நாளில் வாக்குப்பதிவு வெளியான நிலையில்

# தமிழ்நாட்டில் இதுவரை இறுதி வாக்குப்பதிவு எண்ணிக்கை வெளியிடாதது ஏன்?

### அரசியல் கட்சியினர் சரமாரி கேள்வி! குளறுபடி இருந்தால் நீதிமன்றத்தை நாடுவோம் என அறைகூவல்!

*சென்னை, மே. 1-*

*கடந்தாண்டு பீகாரில் மட்டும் 24 மணி நேரத்தில் தேர்தல் வாக்குப்பதிவு வெளியான நிலையில் தமிழகத்தில் இதுவரை இறுதி வாக்குப்பதிவு விவரம் வெளியிடாதது ஏன் என அரசியல் கட்சியினர் இந்திய தேர்தல் ஆணையத்தை சரமாரியாக கேள்வி எழுப்பியுள்ளனர்.*

*மேலும் தரவுகளில் குளறுபடி இருந்தால் நீதி மன்றத்தை நாடுவோம் என அறைக்கூவல் விடுத்துள்ளனர். தமிழகத்தில் உள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக கடந்த ஏப்ரல் 23 அன்று தேர்தல் நடைபெற்றது.*

*4 முனைப்போட்டி நிலவிய இந்தத்தேர்தலில், காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்ற நிலையில் மாலை 6 மணிக்கு நிறைவு பெற்றது. அன்றைய தினத்தின் இறுதியில் வாக்குப்பதிவு 85.15 சதவீதமாக இருந்தது. 2 நாட்களுக்கு பிறகு, மறுசரி பார்ப்பிற்கு பின் இந்த தற்காலிக சதவீதத்தை 85.10 சதவீதமாக (0.05% குறைவு) ஆணையம் திருத்தியது. அதே சமயம், பாலின வாரியான விவரங்களையோ (ஆண்கள், பெண்கள் மற்றும் மூன்றாம் பாலினத்தவர்) அல்லது மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையையோ அதிகாரிகள் இன்னும் வெளியிடவில்லை.*

*பல ஆண்டுகளாக தேர்தல்களை சந்தித்து வரும் தி.மு.க மற்றும் அ.தி.மு.க ஆகிய இரு முக்கிய திராவிட கட்சிகளும், வாக்குச் சாவடி மற்றும் தொகுதி வாரியாக தங்களின் வெற்றி வாய்ப்புகளை கணிக்க படிவம் 17Cஐ பெற்றுள்ளன. ஆனால், சீமானின் நாம் தமிழர் கட்சி, புதிய கட்சிகளான விஜய்யின் தமிழக வெற்றி கழகம் உள்ளிட்ட புதிய கட்சிகள், திராவிடக் கட்சிகளின் இந்த அனுபவத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல், தபால் மற்றும் சேவை வாக்குகள் இல்லாத இறுதி அறிக்கைகளுக்காக இன்னும் காத்திருக்கின்றனர்.*

*இதனிடையே வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாளன்றுதான் இறுதி அறிக்கை வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து மூத்த தேர்தல் அதிகாரி ஒருவர் கூறியதாவது: வாக்கு எண்ணிக்கை நடைபெறும் மே 4ம் தேதி காலை 8 மணி வரை நாங்கள் தபால் வாக்குகளைச் சேகரிப்போம். எனவே, அதுவரை முழுமையான அறிக்கையை வழங்க முடியாது. எங்கள் இணையதளத்தில் வாக்குப்பதிவு சதவீதத்தை புதுப்பித்துள்ளோம். 6 லட்சம் தபால் வாக்குகள் உள்ளதால், ஏதேனும் மாற்றம் இருந்தால் அது வெறும் 1 சதவீதம் என்ற அளவில் மிகக் குறைவாகவே இருக்கும் என்றார்.*

*2025 நவம்பரில் பீகாரில் வாக்குப்பதிவு நாளன்றே பாலின வாரியான விவரங்கள் உட்பட அனைத்துத் தரவுகளையும் எப்படி வெளியிட முடிந்தது என்று கேட்டபோது அந்த அதிகாரி கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டார். பீகாரில் நவம்பர் 6 மற்றும் 11 ஆகிய தேதிகளில் 2 கட்டங்களாகத் தேர்தல் நடைபெற்றது. 2 முறையுமே, வாக்குப்பதிவு நாளன்று இரவு 11 மணிக்குள் ஈவிஎம் வாக்கு எண்ணிக்கையை ஆணையம் வெளியிட்டது.*

*இது குறித்து திமுக அமைப்பு செயலாளர் ஆர். எஸ். பாரதி கூறியதாவது:*

*‘சட்டமன்ற தேர்தலுக்கான முழுமையான தரவுகளை வழங்குமாறு அதிகாரிகளிடம் கேட்டு வருகிறோம். ஆனால், துல்லியத் தன்மையை உறுதிப்படுத்த எண்களை மறுசரிபார்ப்பு செய்வதாகக் கூறி அவர்கள் எங்களைத் தவிர்த்து வருகின்றனர். தரவுகளில் ஏதேனும் குளறுபடிகள் இருப்பின் நீதிமன்றத்தை அணுகுவோம்’*

*இவ்வாறு அவர் கூறினார்.*

*அதேபோல், அ.தி.மு.க. மூத்த நிர்வாகியும், எம். பியுமான இன்பதுரை தெரிவித்ததாவது: ‘‘கட்சியின் வாக்குச் சாவடி முகவர்கள் அந்தந்தப் பகுதிகளில் தரவுகளை சேகரித்துள்ள போதிலும், முழுமையான அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்கள் இன்னும் கிடைக்கவில்லை’’*

*இவ்வாறு அவர் கூறினார்.*




மதுரை வடக்கு மாசி வீதி மணியம்மை மழலையர் பள்ளியில் மன்றத் தலைவர் என்.எம். மாரி தலைமையில் " புரட்சிக்கவிஞர் " பாரதிதாசன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. நிகழ்வில் மன்றப் பொருளாளர் "அகவை முதிர்ந்த தமிழறிஞர்" க.வெ.நெடுஞ்சேரலாதன், மன்றத்தின் துணைச் செயலாளர்கள் கரு. ஆறுமுகம், லெ. முருகேசன், துணைத் தலைவர்கள் டி.வி.அழகர், போடி காமராசு, ச. செல்வக்குமரன், செயற்குழு உறுப்பினர்கள் ப.பாண்டித்துரை, இல். வெள்ளைச்சாமி, ரெ.கார்த்திகேயன், சிறப்பு அழைப்பாளர்கள் புரட்சிப் பாவலர் மன்றத் தலைவர் "பெரியார் நெறியாளர் "பி.வரதராசன், குறும்பா பாவலர் இரா. இரவி, மாமன்ற மேனாள் உறுப்பினர் கா.ரா. முருகேசன், ஆசிரியர் மோகனக் கண்ணன், முத்திருளன், தொலை தொடர்புத்துறை நாகராசன், நா. கதிரவன் ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வி.எஸ்.எஸ். மணி

### மே 2 (1970)



**நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கக் காலத்திலிருந்து திராவிட இயக்க வளர்ச்சிக்குப் பாடுபட்டு, கழகம் துவங்கிய பின்னர், மதுரை மாவட்டத்தில் கழகம் வலிவுடன் வளர காரணமானவர்களில் இவரும் ஒருவர்.**

**தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் உற்ற நண்பராய் திகழ்ந்தவர்.**

**விலைவாசி உயர்வுப் போராட்டம், இந்தி எதிர்ப்புப் போராட்டம் போன்ற அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**1962 மற்றும் 1967 ஆகிய தேர்தல்களில் ஆத்தூர் தொகுதியில் கழகத்தின் சார்பாக போட்டியிட்டு, சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றியவர்.**

**“கழக வளர்ச்சியில் பங்கேற்று நெசவாளர்களின் துயர்துடைப்பிற்கு அரும்பணியாற்றியவர்” என தலைவர் கலைஞரால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**